வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : மலர்விழி

தேதி : 06.08.2026 – வியாழக்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

---

*தலைப்புச் செய்திகள்*

மாட்டுச் சாணம், மற்றும் உயிர்மக் கழிவுகளை தூய எரிசக்தியாக மாற்றுவதற்கான GoBARdhan திட்டத்திற்கு, மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

பிரதமரின் சூர்ய கர் – இலவச மின்சார திட்டத்தினால் பயன்பெறும் வீடுகளின் எண்ணிக்கை 50 லட்சத்தை தாண்டி இருப்பதாக, மத்திய அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

தமிழக அரசின் திருத்தி அமைக்கப்பட்ட வேளாண் பட்ஜெட்டில் விவசாயிகளுக்கு, குறுவை சாகுபடிக்கான ஆதரவுத் திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது.

புதுச்சேரியில் மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா வருகை தொடர்பான பாதுகாப்பு ஏற்பாடுகளை, மத்திய ரிசர்வ் போலீஸ் படை அதிகாரிகள் இன்று நேரில் ஆய்வு செய்தனர்.

*அமைச்சரவை (16)*

மாட்டுச் சாணம், வேளாண் எச்சங்கள் மற்றும் உயிர்மக் கழிவுகளை தூய எரிசக்தி மற்றும் இயற்கை உரமாக மாற்றி கிராமப்புற மக்களின் வருமானத்தை மேம்படுத்தும் நோக்கிலான GoBARdhan திட்டத்தை மொத்தம் 23 ஆயிரத்து 731 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்த மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. நாட்டின் தூய எரிசக்தி பயணத்தில் முக்கிய தருணமாக அமையும் இத்திட்டத்தினால், ஒன்றரை லட்சம் புதிய வேலைவாய்ப்புகளும் உருவாகும் என்று, மத்திய தகவல்-ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் இன்று புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

அஸ்ஸாமில், அவசர காலத்தில் விமானங்களை தரையிறக்குவதற்கான வசதியுடன் கூடிய 4 வழி நெடுஞ்சாலை ஒன்றை, தேஜ்பூர் அருகே அமைக்கும் திட்டத்திற்கும் மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இந்திய விமானப்படையின் ஒத்துழைப்புடன் கூடிய இத்திட்டத்தினால் தேஜ்பூர் உட்பட மக்கள் நெருக்கம் அதிகம் உள்ள பகுதிகளில் போக்குவரத்து நெரிசல் மற்றும் பயண நேரம் குறைந்து, எரிபொருள் சிக்கனம் மேம்படும் என்று அமைச்சர் தெரிவித்தார்.

*நாடாளுமன்றம் (15)*

நடப்பு உலகச் சூழல்களால் பாதிக்கப்பட்டுள்ள முக்கியத் துறைகளுக்கு கை கொடுப்பதன் மூலம் உள்நாட்டுப் பொருளாதாரத்தின் ஸ்திரத் தன்மையை மேம்படுத்தும் வகையில், வரி விதிப்பு மற்றும் இதர சட்டங்களில் திருத்தம் கொண்டு வருவதற்கான மசோதா, இன்று மக்களவையில், நிறைவேற்றப்பட்டது. கடந்த ஜூன் 5ஆம் தேதி பிறப்பிக்கப்பட்ட அவசர சட்டத்திற்கு மாற்றாக இம்மசோதா நிறைவேற்றப் பட்டுள்ளது.

2022-23ஆம் நிதியாண்டில், இந்திய தொகுப்பு நிதியில் இருந்து, பல்வேறு துறைகளுக்காகச் செலவிடப்பட்ட, சுமார் 54 ஆயிரம் கோடி ரூபாய் கூடுதல் தொகைக்கு ஒப்புதல் கோரும் வகையிலான, அரசின் 3ஆம் எண் நிதி ஒதுக்கீட்டு மசோதா, அண்மையில் மக்களவையில் நிறைவேற்றப்பட்டதை தொடர்ந்து, இன்று மாநிலங்களவையிலும், நிறைவேற்றப்பட்டது.

எதிர்க்கட்சிகளின் அமளி காரணமாக இரு அவைகளும் மீண்டும் மீண்டும் ஒத்தி வைக்கப்பட்டு, பின்னர் நாளை காலை 11 மணி வரை ஒத்தி வைக்கப்பட்டன.

*பிரதமரின் சூர்ய கர் - 1(07)*

நாட்டில், பிரதமரின் சூர்ய கர் – இலவச மின்சார திட்டத்தினால் பயன்பெறும் வீடுகளின் எண்ணிக்கை 50 லட்சத்தை தாண்டி இருப்பதாக, புதிய மற்றும் புதுப்பிக்கவல்ல எரிசக்தி துறைக்கான மத்திய அமைச்சர் திரு.பிரல்ஹாத் ஜோஷி கூறியுள்ளார். இன்று புதுடெல்லியில், சிஐஐ-இந்திய தொழில்கள் கூட்டமைப்பின் சர்வதேச எரிசக்தி மாநாடு மற்றும் கண்காட்சியின் தொடக்க விழாவில் அவர் உரையாற்றினார். இது குறித்து ஒரு செய்தி தொகுப்பு…

*பிரதமரின் சூர்ய கர் – 2 வாய்ஸ் (12)*

சூர்ய கர் திட்டத்தினால் தற்போது நாட்டில் 19 லட்சம் வீடுகள், மின் கட்டணமே இல்லாத நிலைக்கு மேம்பட்டுள்ளதாகவும், சுமார் 12 லட்சம் வீடுகள், உபரி மின்சாரத்தின் விற்பனை மூலம், மொத்தம் 421 கோடி ரூபாய் வருமானம் ஈட்டி இருப்பதாகவும், அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்தார். நாட்டில் தற்போது, தினசரி 16 ஆயிரம் வீடுகளின் மேற்கூரையில், சோலார் மின் உற்பத்தி வசதிகள் நிறுவப்பட்டு வருவதாகவும், கடந்த 9 மாத காலத்திலேயே, இந்த எண்ணிக்கை, 3.2 மடங்கு அதிகரித்து இருப்பதாகவும் அவர் கூறினார்.

புதைபடிவ எரிபொருள் அல்லாத ஆதாரங்கள் மூலமான, இந்தியாவின் மொத்த மின்சார உற்பத்தி திறனை, 2030ஆம் ஆண்டிற்குள் 500 கிகா வாட்டாக உயர்த்தும் இலக்கை நோக்கி, நாடு நல்ல முறையில் முன்னேறி வருவதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

*வேளாண் பட்ஜெட் -1 (18)*

தமிழக சட்டமன்றத்தில், திருத்தி அமைக்கப்பட்ட வேளாண் பட்ஜெட் இன்று தாக்கல் செய்யப்பட்டது. வேளாண் அமைச்சர் திரு. ஆர். வினோத் தாக்கல் செய்த இந்த பட்ஜெட்டில், டெல்டா மற்றும் இதர விவசாயிகளுக்கு, சுமார் 135 கோடி ரூபாய் மதிப்பில், குறுவை சாகுபடிக்கான ஆதரவுத் திட்டம் அறிவிக்கப்பட்டது. சூப்பர் எல்-நினோ விளைவுகளை சமாளிக்க, மாவட்ட அளவிலான அவசரகால திட்டம், அடுத்த 5 ஆண்டுகளில் உணவு தானிய உற்பத்தியை 131 லட்சம் டன்னாக உயர்த்தும் இலக்கு, விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்க 7 ஆயிரத்து 432 கோடி ரூபாய் மானியம், 122 கோடி ரூபாய் செலவில் மண்வளப் பாதுகாப்பு இயக்கம், சான்றளிக்கப்பட்ட விதை உற்பத்திக்கு 250 கோடி ரூபாய் ஒதுக்கீடு உள்ளிட்ட அறிவிப்புகளும், வேளாண் பட்ஜெட்டில் வெளியிடப்பட்டன. மாநிலத்தின் சாகுபடிப் பரப்பு முழுவதையும், பிரதமரின் பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் கொண்டு வருவதே, அரசின் நீண்ட காலக் குறிக்கோள் என்று, வேளாண் அமைச்சர் திரு. வினோத், தமது உரையில் கூறினார். பயறு வகைகள் மற்றும் எண்ணெய் வித்துக்களின் உற்பத்தியில் சுயசார்பை எட்டுவதற்கான மத்திய-மாநில இயக்கம், 203 கோடி ரூபாய் செலவில் தமிழகத்தில் அமல்படுத்தப்படும் என்றும்,

*வேளாண் பட்ஜெட் -2 (06)*

பஞ்சாலைகளுக்குத் தேவையான பருத்தி, வெளிமாநிலங்களில் இருந்து வரவழைக்கப் படுவதை தவிர்க்க, **பருத்தி மறுமலர்ச்சி இயக்கம்** தொடக்கப்படும் என்றும் அவர் அறிவித்தார். இன்று வேளாண் பட்ஜெட் தாக்கலின் போது, காவிரி பிரச்சனையால் விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகளை குறிக்கும் வகையில் திமுக உறுப்பினர்கள் கருப்பு சட்டை அணிந்து அவைக்கு வந்திருந்தனர்.

*புதுச்சேரி அமித்ஷா (07)*

மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா வரும் 8, 9 ஆகிய தேதிகளில் புதுச்சேரிக்கு வருகை தருவதை ஒட்டி விமான நிலையத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள பாதுகாப்பு ஏற்பாடுகளை மத்திய ரிசர்வ் போலீஸ் படையின் கமாண்டன்ட் திரு. யோகேஷ் புரோகித் தலைமையிலான குழுவினர் இன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர். காவல்துறை உயர் அதிகாரிகள் மற்றும் தொடர்புடைய இதர துறைகளின் அதிகாரிகள் உடனிருந்தனர்.

*புதுச்சேரி முகாம் (11)*

மத்திய திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சகம் மூலமான, பிரதமரின் தேசிய தொழில் பழகுநர் சேர்க்கை முகாம், புதுச்சேரியில், வரும் 10ஆம் தேதி நடைபெறவுள்ளது. மேட்டுப்பாளையம் அரசு ஆடவர் தொழிற்பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ள இம்முகாமில், பொதுத் துறை, தனியார் துறை, மற்றும், சிறு-குறு-நடுத்தர தொழில்துறை நிறுவனங்கள் கலந்து கொண்டு தொழில் பழகுநர் பயிற்சிக்கு ஆள் எடுக்க உள்ளனர். 5 முதல் 12ஆம் வகுப்பு வரை தேர்ச்சி பெற்றவர்கள், ஐடிஐ, டிப்ளமா மற்றும் பொறியியல் பட்டப்படிப்பு முடித்தவர்கள் இம்முகாமில் கலந்து கொண்டு பயன்பெறலாம் என புதுச்சேரி அரசின் தொழிலாளர் துறை அறிவித்துள்ளது. தொழில் பழகுநர் பயிற்சியில் சேரும் அனைவருக்கும் மாதம் 7 ஆயிரம் முதல் 10 ஆயிரம் வரை ஊக்கத் தொகை வழங்கப்படும்.

*மாணவர் சேர்க்கை (08)*

புதுச்சேரியில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளிகளில் இவ்வாண்டு 11-ஆம் வகுப்பில் சேர விண்ணப்பித்து கலந்தாய்வின்போது இடம் கிடைக்காத, மற்றும், இதுவரை எந்தப் பள்ளியிலும் சேராத மாணவ, மாணவிகளுக்கு தனி கலந்தாய்வு நடத்தப்பட உள்ளது. வரும் 7, 10 ஆகிய தேதிகளில், குருசுக்குப்பம்,

என்.கே.சி. அரசு மேல்நிலைப்பள்ளியில் நடைபெறும் இக்கலந்தாய்வில், தகுதியுள்ள மாணவர்கள், உரிய சான்றிதழ்களுடன் நேரில் வந்து கலந்து கொள்ளலாம் என பள்ளிக் கல்வி இயக்ககம் அறிவித்துள்ளது.

*திரைப்பட விழா - (வாய்ஸ்) (16)*

புதுச்சேரி திரை இயக்கம் மற்றும் அலையன்ஸ் பிரான்சே சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள 3ஆவது உலக திரைப்பட விழா புதுச்சேரியில் நாளை தொடங்கவுள்ளது. இந்த 3 நாள் விழாவை, திரைப்பட இயக்குநர் ஹரிஹரன் நாளை மாலை தொடக்கி வைக்கிறார். முன்னாள் அமைச்சர் திரு. லட்சுமி நாராயணன், தலைமைச் செயலர் டாக்டர் சரத் சௌஹான், அலையன்ஸ் பிரான்சே தலைவர் பேராசிரியர் வெங்கட்ராமன், மற்றும் திரைத்துறை பிரமுகர்கள் எழுத்தாளர்களும் தொடக்க விழாவில் பங்கேற்கவுள்ளனர். இந்த 3 நாள் திரைப்பட விழாவின்போது பிரான்ஸ், ஜெர்மனி, இலங்கை, இந்தியா உள்ளிட்ட பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 10 திரைப்படங்கள் திரையிடப்படும். விழாவின் 2ஆம் நாளில் இயக்குநர்கள் ஹரிஹரன், சிவக்குமார் மோகனன், சோமீதரன் ஆகியோர் இணைந்து பங்கேற்கும் சிறப்பு பயிலரங்கமும் இடம்பெறவுள்ளது. திரைப்பட விழா குறித்து புதுச்சேரி திரை இயக்கத்தின் செயலர் திரு. கே.ஆர். ரவிச்சந்திரன் இன்று செய்தியாளர்களிடம் பேசுகையில், சர்வதேச தரத்தில் புதுச்சேரியில் நடைபெறும் இத்திரைப்பட விழா, கலை ஆர்வலர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக அமையும் என்றார். அவர் மேலும் கூறுகையில் …

*வானிலை (17)*

இன்று கோவை, தேனி, நெல்லை, குமரி மாவட்டங்களின் மலைப் பகுதிகள், மற்றும், நீலகிரி, ராணிப்பேட்டை, திருவள்ளூர் மாவட்டங்களின் ஓரிரு இடங்களில், பலத்த காற்றுடன் கூடிய கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாக, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதர மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள், டெல்டா மாவட்டங்கள், சென்னை, செங்கல்பட்டு, வேலூர், திருவண்ணாமலை, விழுப்புரம், கடலூர் உள்ளிட்ட மாவட்டங்கள், மற்றும், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில், பலத்த காற்றுடன் கூடிய மிதமான மழை பெய்யக்கூடும் என்றும், தமிழகத்தின் இதர பகுதிகளில், லேசானது முதல் மிதமான மழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும், வானிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. வரும் 12ஆம் தேதி வரை மழை நீடிக்கலாம் என்றும்

எதிர்பார்க்கப்படுகிறது. சூறாவளிக் காற்றுக்கு வாய்ப்பு அதிகமுள்ள, தமிழக கடலோரப் பகுதிகள், வங்கக் கடல் பகுதிகள், மற்றும், அரபிக்கடல் பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர். இதற்கிடையே கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக சென்னை மாவட்டம், மாதவரம் உள்ளிட்ட இடங்களில், 4 சென்டிமீட்டர் மழை பதிவாகியுள்ளது.

*கேரளம் மழை (08)*

கேரளத்தில் இன்று, இடுக்கி, கோட்டயம், பத்தனம்திட்டா ஆகிய 3 மாவட்டங்களுக்கு, அதி கனமழை குறித்த ரெட் அலர்ட் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இது அல்லாது 5 மாவட்டங்களுக்கு மிக கனமழை குறித்த ஆரஞ்சு அலர்ட், மற்றும் எஞ்சிய 6 மாவட்டங்களுக்கு, கனமழை குறித்த மஞ்சள் அலர்ட் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, இடுக்கி மற்றும் பத்தனம்திட்டா மாவட்டங்களின் மலைப் பகுதிகளில் கனமழை நீடிப்பதால், மலைச்சரிவு உள்ளிட்ட அபாயங்கள் குறித்து கவலை நீடிப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

*மகளிர் ஹாக்கி (06) 160*

ஆகஸ்ட் 30 முதல், செப்டம்பர் 13ஆம் தேதி வரை சீனாவில் நடைபெறவுள்ள, **ஜூனியர் ஆசியக் கோப்பை ஹாக்கி தொடருக்கான,** இந்தியாவின் 18 **உறுப்பினர் ஜூனியர் மகளிர் அணி,** இன்று அறிவிக்கப்பட்டுள்ளது. **கைதம் ஷெலிமா சானு** தலைமையிலான இந்த அணிக்கு, தலைமைப் பயிற்சியாளர் **டிம் ஒயிட்** மூலம், விரிவான பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

*பிரிக்ஸ் (10)*

பிரிக்ஸ் நாடுகளின் படைப்புத் திறன்சார் பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் மும்பையில் இன்று தொடங்கிய **பிரிக்ஸ் வேவ்ஸ் பஜார்-சர்வதேச சந்தை நிகழ்வில்,** பிரிக்ஸ் நாடுகள் மற்றும் கூட்டாண்மை நாடுகளிலிருந்து சுமார் 500 பிரதிநிதிகள் பங்கேற்றுள்ளனர். மஹாராஷ்டிர கலாச்சாரத் துறை அமைச்சர் திரு. ஆஷிஷ் ஷெலார், மத்திய தகவல் ஒலிபரப்புத் துறை செயலர் திரு. சஞ்சல் குமார் ஆகியோர் இணைந்து இந்த 2 நாள் நிகழ்வைத் தொடக்கி வைத்தனர். திரைப்படத் துறை சார்ந்த மத்திய-மாநில அரசு அமைப்புகளின் உயர் அதிகாரிகளும், திரையுலக பிரபலங்கள் மற்றும் சம்பந்தப்பட்ட பல்வேறு தரப்பினரும், தொடக்க விழாவில் கலந்து கொண்டனர்.

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

மாட்டுச் சாணம், மற்றும் உயிர்மக் கழிவுகளை தூய எரிசக்தியாக மாற்றுவதற்கான GoBARdhan திட்டத்திற்கு, மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

பிரதமரின் சூர்ய கர் – இலவச மின்சார திட்டத்தினால் பயன்பெறும் வீடுகளின் எண்ணிக்கை 50 லட்சத்தை தாண்டி இருப்பதாக, மத்திய அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

தமிழக அரசின் திருத்தி அமைக்கப்பட்ட வேளாண் பட்ஜெட்டில் விவசாயிகளுக்கு, குறுவை சாகுபடிக்கான ஆதரவுத் திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது.

புதுச்சேரியில் மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா வருகை தொடர்பான பாதுகாப்பு ஏற்பாடுகளை, மத்திய ரிசர்வ் போலீஸ் படை அதிகாரிகள் இன்று நேரில் ஆய்வு செய்தனர்.